1971 அக்டோபர் 22]

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, there is an Agricultural Farm in the Hosur Cattle Farm and conditions are very ideal there. May I know from the Hon. Minister whether he will provide more funds to see that the Farm becomes an ideal farm for the entire State?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தற்சமயம் அப்படி ஒன்றும் யோசனை இல்லை.

தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் விதைப்பண்ணைகள்

* 27.வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களைச் சேர்ந்த, தீவிரச் சாகுபடித் திட்டம் உள்ள எல்லா ஒன்றியப் பகுதிகளிலும் அதற்குத் தேவையான முழு அளவில் நல்ல விதைகளை உற்பத்தி செய்வதற்குள்ள விதைப் பண்ணைகள் அமைக்க எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஆதார வித்துக்கள் உற்பத்தி செய்ய தஞ்சை மாவட்டத்தில் 14 அரசு விதைப் பண்ணைகளும் குடுமியாமலையில் உள்ள 'அன்னு பண்ணை' உட்பட திருச்சி மாவட்டத்தில் 7 விதைப் பண்ணைகளும் உள்ளன. இவற்றின் மொத்தப் பரப்பளவு 2,174.17 ஏக்கர். இந்த மாவட்டங்களுக்குத் தேவையான அளவுக்கு நல்ல ஆதார வித்துக்கள் கையிருப்பில் தற்போது உள்ளது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இப்போது அரசாங்க விதைப் பண்ணைகள் மூலமாகவும், தனியார் விதைப் பண்ணைகள் மூலமாகவும் தரப்படும் விதைகள் சரியான முறையில் பாதுகாத்து வைக்கப்படாத காரணத்தால் விதைகள் முளைப்பது குறைவாக இருக்கிறது. ஆகவே, விதைகள் முளைக்கும் தன்மை அதிக விகிதாசாரம் இருக்கும் முறையில் புதிய முறைகளைக் கையாள அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: முதல் ஆதார வித்துக்களும், அடுத்து இரண்டாவது ரக வித்துக்களும் இப்போது தயார் செய்யப்பட்டு வருகிறது. அவை போதிய அளவு நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி சந்தேகப் படுகிற இடங்களில் விவசாய அதிகாரிகள் அந்த விதைகள் முளைக்கின்றனவா என்று சோதனை செய்து அதற்குப் பிறகு விவசாயிகளுக்குக் கொடுக்கும் திட்டமும் இருக்கிறது. அதுமாத்திரமல்லாமல் இப்போது எல்லா விதைகளுமே பரிசோதனை செய்யப்பட்டு நூற்றுக்கு இவ்வளவு சதவிகிதம் முளைக்கிறது என்ற அத்தாட்சி பெற்ற பிறகுதான் கொடுக்க வேண்டுமென்ற திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[1971 அக்டோபர் 22

THIRU B. VENKATASWAMY: Sir, may I know from the Hon. Minister whether there is any proposal to open State Seed Farms in every district headquarters in the State?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்போதே 60 பண்ணைகள் நம்முடைய மாநிலத்தில் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. அந்தப் பண்ணைகளில் இப்போது நம்முடைய தேவைக்கு அதிகமாகவே உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. மீண்டும் எந்தெந்தப் பகுதிகளில் புதிய விதைப் பண்ணைகளைத் திறக்க வேண்டுமென்பதற்கான குறிப்புகள் எதுவும் இல்லை. தேவையானால் அது பற்றிக் கவனிக்கலாம்.

திரு. சோ. அழகர்சாமி: இப்போது அரசாங்கப் பண்ணையிலிருந்தும், தனியார் பண்ணையிலிருந்தும் தரப்படும் பொறுக்கு விதைகளில் கலப்படம் இருப்பதால் சரியானபடி முளைக்கவில்லை என்ற புகார் இருக்கிறது. அது மட்டுமல்லாமல் சோளம், கம்பு போன்ற நவதானியங்களின் விதைகள் விலை கிலோ 10 ரூபாய் என்று விற்கப்படுவதால் எக்கருக்கு விதையே 30 ரூபாய்க்கு வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த விலையைக் குறைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: நாம் முதல் ஆதார விதைகளை உற்பத்தி செய்கிறோம். இரண்டாவது விதைகளைப் பல விவசாயிகளிடத்தில் கொடுத்து விவசாய இலாகா மூலமாக மேற்பார்வையிட்டு அறுவடையான பிறகு சரியான விதைகளை மட்டும் பொறுக்கி எடுத்து மற்றவைகளைத் தள்ளி விடுகிறோம். இதன் காரணமாகக் கொஞ்சம் விலை அதிகமாக இருக்கலாம். அதுபற்றி விவசாயிகளிடமிருந்தும் கோரிக்கை வந்திருக்கிறது. அது பற்றியும் பரிசீலனை செய்துகொண்டு வருகிறோம்.

திரு. துரை கோவிந்தராசன்: தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் விதைப் பண்ணைகள் இல்லாத காரணத்தால் விவசாயிகளிடமிருந்து விதைகளை அரசு வாங்கி விவசாயிகளுக்கு விநியோகிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தஞ்சை மாவட்டத்தில் 14 பண்ணைகள் பொறுக்கு விதைகளைச் சரியான முறையில் விநியோகித்து வருகின்றன. அதேபோல் திருச்சி மாவட்டத்தில் 7 பண்ணைகள் சரியான முறையில் பொறுக்கு விதைகளை விநியோகித்து வருகின்றன. தனியார் துறையிலிருந்து வாங்கும்போதும் வேளாண்மைத்துறை அதிகாரிகள் பல்வேறு சோதனைகளைச் செய்து பொறுக்கு விதைகளைத்தான் எடுக்கிறார்கள். மற்றவற்றைக் கழித்து விடுகிறார்கள். தரமான விதைகள் இப்போது தேவையான அளவுக்கு இருக்கிறது. தரமான விதைகளைத்தான் கொடுத்து வருகிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: புதிய ரக ஆதார விதைகள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு ஆராய்ச்சி நடைபெறுகிறதா?

1971 அக்டோபர் 22]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : வெளிநாடுகளில் இருந்து எதுவும் இறக்குமதி செய்யவில்லை.

திரு. கே. என். குமாரசாமி : அமைச்சர் அவர்கள் நம்முடைய தேவைக்கு அதிகமாகப் பொறுக்கு விதைகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். இப்போது பஞ்சாயத்து யூனியன் மூலமாக விதைகள் விநியோகிக்கப்படும்போது காலம் மாறி ஸ்டாக் ஆகியிருக்கும் விதைகளை நிர்ப்பந்தமாகக் கொடுப்பதைத் தடுத்து நிறுத்துவார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படிப்பட்ட குறைகள் ஒருசில இடங்களில் இருந்து அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த விதைகளை விநியோகிக்க வேண்டாமென்று சொல்லி அதற்குப் பதிலாக வேறு நல்ல விதைகள் ஆங்காங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : தரமான விதைகள் ஒரு பக்கம் இருந்தாலும் அதை வாங்கும்போது நம்பிக்கை குறைவாக இருக்கிறது. சர்க்கார் இந்த விதைகளைக் கொடுக்கும்போது ரெஸ்பான்சிபிலிடி ஃபிக்ஸ் பண்ண முடியுமா ? குறை இருந்தால் அதை நிவர்த்தி செய்யும் வகையில் பொறுப்பு யார் என்று நிர்ணயிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போதே ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகக் கொடுக்கப்படுகின்ற விதைகள் ஆறு மாதத்திற்கு மேலாகிவிட்டது என்று சொன்னால் அந்த விதைகளுக்குப் பதிலாக வேறு விதைகள் கொடுக்கப்படுகின்றன. விதைகளைக் கொடுப்பதற்கு முன்னால் தனியாக எடுத்து முளைக்கப் போட்டு 100 விதைகளுக்கு எவ்வளவு முளைக்கின்றன என்று பரிசீலனை செய்த பிறகுதான் கொடுக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. டெஸ்டிங் லேபரட்டரி மூலமாகவும் ஆங்காங்கு சோதனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன் : அமைச்சர் அவர்கள் வெளிநாட்டிலிருந்து ஹைபிரிட்ஸ் இறக்குமதி செய்வது இல்லையென்று சொன்னார்கள். இப்போது பாம்பே, டிராம்பேயில் அரசு நிலத்தில் பொறுக்கு விதைகள் தயாரிக்கிறார்கள். அங்கிருந்து விதைகளை இறக்குமதி செய்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : வெளிநாட்டிலிருந்து வரவில்லை. வெளி மாநிலத்திலிருந்து கொண்டுவரப்பட்டுப் பரிசீலனை செய்து புதிய விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு கொடுக்கப்படுகின்றன.

திரு. எம். முத்தையா : ஊராட்சி ஒன்றியங்களில் விவசாய அலுவலர்களைக் கட்டாயமாக இத்தனை குவிண்டால் விதைகளை விற்றாக வேண்டுமென்று வற்புறுத்தப்படுவது தடுக்கப்படுமா ?

[1971 அக்டோபர் 22

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படி ஒன்றும் கட்டாயமாக வற்புறுத்தவில்லை. இப்போது பொறுக்கு விதைகளுக்கும், விரிய விதைகளுக்கும் தமிழக விவசாயிகளிடத்தில் நல்ல கிராக்கி இருக்கிறது. ஆகவே, யாரையும் கட்டாயப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. இப்போது 'கருணை' என்ற நெல் தஞ்சை மாவட்டத்திற்கு மட்டுந்தான் கொடுக்கப்படுகிறது. மற்ற மாவட்டங்களுக்குக் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. அப்படி ஏதாவது கட்டாயப்படுத்தி வாங்கவேண்டுமென்று சொல்லுவதாக இருந்தால் அதுபற்றி அங்கத்தினர் அவர்கள் உடனடியாகத் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நெல்லில் மட்டும் கவனம் செலுத்துகிற இந்த அரசாங்கம் பருப்பு வகைகளைப்பற்றி—அவைகளின் விலைகள் ஏறிக்கொண்டே போகின்றனவாதலால்—அதற்கு வேண்டிய பண்ணைகளை ஆரம்பித்து உடனடியாக விவசாயிகளுக்கு விநியோகம் செய்து அதன் உற்பத்தியைப் பெருக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்போது நெல்லைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ தமிழ்நாடு தன்னிறைவு பெற்றிருக்கிறது. இப்போது பருப்புகளுக்காக ஒரு தனித் திட்டம் தயாரிக்கப்பட்டு இந்த ஆண்டு தமிழகத்தில் 23 லட்சம் ஏக்கராக்கள் உளுந்து, துவரை, பாசிப்பயிறு, பச்சைப்பயிறு போன்ற பயிறு வகைகளை உற்பத்தி செய்யத் திட்டம் தயாரிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இப்போது புதிய ஆராய்ச்சி மூலம் பாசிப் பயிறில் ஒரு புதிய ரகப் பயிர் தயாரிக்கப்பட்டு நம் மாநிலத்திற்கு மட்டுமல்லாது வெளி மாநிலங்களுக்குக் கூட அந்த விதைகளைக் கொடுக்கக்கூடிய அளவிற்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH: There are varieties of paddy seeds in our State and new varieties are being evolved but, I have not come across paddy seeds suitable for cooler regions like Hosur and Denkanikotta, where between November and February, the temperature ranges between 60° to 90°. There are no paddy seeds suitable for that area. I have contacted the Dircetor of Agriculture here but I was not able to get suitable reply. I attended a conference convened by the Central Government and presided over by Thiru C. Subramaniam last year. Even there they did not give a correct reply. May I know from the Hon. Minister whether seeds required for cooler regions will be evolved by the Agriculture Department of our State ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: நான் முதலிலேயே அதைப்பற்றிக் குறிப்பிட்டேன். அந்தந்தப் பகுதி தட்ப வெட்ப நிலைக்கேற்றவாறு அவைகள் பரிசிலனை செய்யப்பட்டு வருகின்றன. உதாரணமாக, தஞ்சை மாவட்டத்தில் புதிதாகச் செயல்படுத்தப்பட்டு வருகிற 'கருணை' நெல் என்பது மழை காலத்திற்கு

1971 அக்டோபர் 22]

முன்னுல் அறுவடை செய்து கொள்ளலாம். மற்ற ஆடுதுறை போன்ற நெல்லுக்கு 125 நாட்களிலிருந்து 130 நாட்கள் வரைதான் வயது. ஆனுல் ' கருணை ' 110-லிருந்து 115 நாட்களுக்குள்ளே அறுவடை செய்து விடலாம். எந்தக் காற்று அல்லது எந்தப் புயல் வீசினுலும் அல்லது என்ன மழை பெய்தாலும் அது சாயாது. சாய்ந்து முளைக்காது. இப்போது தஞ்சை மாவட்டத்தில் பயிர் செய்யப்படுகிறது. அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்றவாறு எந்தெந்தப் பயிர் வகைகளை எப்போது எப்போது சாகுபடி செய்யலாம் என்பதைப்பற்றி விவசாய அலுவலர்கள் ஆங்காங்கு சொல்லி வருகிருர்கள். இப்போது குறுவை அறுவடைக்குப் பிறகு தாளடிக்கு ஐ.ஆர். 8, பொன்னி போன்ற ரகங்களை ஆங்காங்கு பயிர் செய்யலாம் என்றும் மற்றவைகளையும் சொல்லி வருகிருர்கள். சில மாவட்டங்களில் ஐ.ஆர். 8-ஐ மூன்று போகங்களுக்கு நடுவதை நானே நேரில் பார்த்திருக்கிறேன். மூன்று போககங்களுக்குச் சேர்ந்தார்போல் தாளடி, குறுவை இவற்றிற்குப் போடுகிருர்கள். அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்றவாறு செய்யப்பட்டு வருகிறது. அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்றவாறு, விவசாய அலுவலர்களை அணுகினுல் எந்தெந்தப் பட்டத்தில் எந்தெந்த விதைகளைப் போடலாம் என்பதைப் பற்றிய விவரங்களை அளிப்பார்கள்.

Housing Units

* 28 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state the various Housing Units functioning in this State under the State Housing Board ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கீழ் மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் மூன்று வீட்டு வசதிப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

திரு. என். டென்னிஸ் : கன்னியாகுமரி மாவட்டத்தில் இதன் பிரிவு ஒன்று அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மதுரை வீட்டுவசதிப் பிரிவின்கீழ் கன்னியாகுமரி மாவட்டமும் இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மதுரைப் பிரிவின் கீழ் இப்போது எவ்வளவு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன ? அவை வாடகைக்கு விடப்பட்டு, சொந்தமாக்கக்கூடிய விஷயத்திலும் பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்ற விஷயம் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மதுரை வீட்டு வசதிப் பிரிவின்கீழ் குறைந்த வருமானம் உள்ளோர்க்கு வீட்டு வசதி 294, பயன்படுத்திய தொகை 35 லட்சம் ரூபாய். நடுத்தர வருமானம் உள்ளோருக்கு வீட்டு வசதி 30, பயன்படுத்திய தொகை ரூ. 10 லட்சம். தமிழ்நாடு அரசு பணியாளர்களுக்கு வாடகைக்கு வீட்டு வசதித் திட்டம் மூலம் 558 வீடுகள், தொகை 35 லட்சம் ரூபாய்.